<u>அசல் வழக்கு எண். 239/2019</u>

<u>19.01.2026</u>

**பெயர் – ஆனந்தி க/பெ.சிவக்குமார்** (PW–2)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாகிதள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) 1ம் பிரதிவாதி சிவாச்சல குருக்கள் இடைஞ்சல் செய்ததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தாவாச் சொத்து குறித்து பெயர் மாற்றம் செய்ய 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் எந்த மனுவும் நாங்கள் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் எந்த தேதியில் மனு கொடுத்தார் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். அந்த மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது. 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் அதைப் பற்றி தெரியாது. 2 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கில் அவசிய தரப்பினர் இல்லை என்றும், அவர்களை எந்த பரிகாரமும் கோராமல் வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.19 17:56:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்